ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1789/41 - 2012 දෙසැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2012.12.21

*1789/41 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்**

பிரிவு 4(2) இன் கீழான பிரசுரிப்பு

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் “நிறுவகம்” என குறிப்பிடப்படும்) அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக, 1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள, 2013 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும், பொதுவான கட்டுப்பாட்டு இணைப்புகளுக்கான ஒருங்கிணைத்தல் கணக்கீடு தொடர்பிலான விதந்துரைக்கப்பட்ட நடைமுறைக் கூற்றினை நிறுவகம் கடைப்பிடிக்க ஏற்றுக்கொண்டுள்ளது.

பேரவையின் கட்டளைப்படி,

அருண அல்விஸ்,
செயலாளர்.

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இல 30A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 7,
2012, டிசெம்பர் 21.

**விதந்துரைக்கப்பட்ட நடைமுறைக் கூற்று**

**பொதுக்கட்டுப்பாட்டு இணைப்புக்களுக்கான ஒருங்கிணைத்தல் கணக்கீடு**

பொதுக்கட்டுப்பாட்டு இணைப்புகளின் ஒருங்கிணைத்தல் கணக்கீட்டின் விதந்துரைக்கப்பட்ட நடைமுறைக் கூற்று இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவக பேரவையினால் 2012 டிசம்பர் 19ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த கணக்கியல் வழிகாட்டி இலங்கைப் பட்டயக்கணக்கறிஞர் நிறுவக பதிப்புரிமைக் குறிப்பினை கொண்டுள்ளது. பிரத்தியேக மற்றும் வர்த்தக உபயோகங்களுக்காக மூல நிறுவகத்திற்கு மீள்பதிப்பின் தெரியப்படுத்துதலை உட்படுத்தும் நிபந்தனைக்கு அமைவாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படாத வடிவில் (இந்த அறிவித்தலினை வைத்துக்கொண்டு) மீளாக்கம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மீளாக்கம் மற்றும் வர்த்தக தேவைகளுக்கான உரிமைகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளும் விசாரணைகளும் திரு. அருண அல்விஸ், செயலாளர், இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் 30A, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07, இலங்கை எனும் முகவரிக்கு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## பொதுக் கட்டுப்பாட்டு இணைப்புக்களுக்கான ஒருங்கிணைப்புக் கணக்கீடு

### உள்ளடக்கம்

*பந்திகள்*


| | |
|---|---|
| அறிமுகம் | 1 – 4 |
| கோட்பாடுகள் | 5 - 8 |
| விதிமுறைகள் | 9 - 12 |
| புதிதாக ஆக்கப்பட்ட மேன்னிலை உரிமத்தினால் அடக்கப்படும் கணக்கீட்டுக் காலம் | 13 - 14 |
| பிரயோகிக்கக்கூடிய SLFRSs/LKASs இனால் தேவைப்படுத்தியவைக்கு மேலதிகமான வெளிக்காட்டல்கள் | 15 - 17 |
| பங்கொன்றிற்கான வருவாய் | 18 |
| அமுலுக்கு வரும் திகதி | 19 |
| பின்னிணைப்பு 1 – எண்கள் அடிப்படையிலான உதாரணங்கள் | |
| பின்னிணைப்பு 2 – இந்த SoRP பிரயோகிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்கள் | |


இந்த விதந்துரைப்பட்ட நடைமுறைக் கூற்றுக்களுக்கான (SoRP ) ஏற்பாடுகள் கட்டாயமற்றவை ஆன போதிலும், அவற்றின் நோக்கெல்லைக்கு உட்பட்ட உரிமங்கள் இந்த SoRP இல் குறிப்பிடப்பட்ட விதந்துரைகளுக்கு ஒத்திசைதல் ஊக்குவிக்கப்படுகின்றது.

**விதந்துரைக்கப்பட்ட நடைமுறைக் கூற்று**

*அறிமுகம்*

1. இந்த SoRP பொதுக் கட்டுப்பாட்டு இணைப்பினை ஏற்பிசைவு செய்யும்போது ஒருங்கிணைப்பு கணக்கீட்டின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் விதிமுறைகளை குறிப்பிடுகின்றது. இந்த SoRP க்கும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் அல்லது விளக்கங்களுக்கு**ம்** (சேர்த்து SLFRSs/LKASs என அழைக்கப்படும்) இடையே ஒவ்வாமை காணப்படுமேயாகில், அந்த நியமம் அல்லது விளக்கம் கடைப்பிடிக்கப்படும். சில SLFRSs/LKASs ஒருங்கிணைப்புக் கணக்கீட்டினை உபயோகிக்கும் பொதுவான கட்டுப்பாட்டு இணைப்புக் கணக்கீட்டிற்கான தொடர்புபட்ட வழிகாட்டல்களை அல்லது தேவைப்பாடுகளை கொண்டிருக்கக்கூடும். உதாரணமாக, LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* ஒத்த ஊடுசெயல்களுக்கு கணக்கீட்டுக் கொள்கைகள் கொள்கைமாறாத அடிப்படையில் பிரயோகிக்க வேண்டுமென தேவைப்படுத்துவது, LKAS 27 *ஒன்றித்த மற்றும் வேறான நிதிக்கூற்றுக்கள்* ஒன்றித்தற் கோட்பாடுகள் மற்றும் உப கம்பனியின் விற்பனையின் கையாள்கைபற்றி குறிப்பிடுவது மற்றும் LKAS 37 *ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்* மீள்கட்டமைப்பிற்கான ஏற்பாடுகளை குறிப்பிடுவது. அதன்படி உரிமமொன்று ஒருங்கிணைப்பு கணக்கீட்டினை பிரயோகிக்கும்போது, இந்த SoRP இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டிகளுக்குப் பதிலாக அல்லது மேலதிகமாக அந்த வழிகாட்டிகளை அல்லது தேவைப்பாடுகளை பிரயோகிக்க வெண்டும்.

2. இணைப்பொன்று அதன் நோக்கெல்லையிலிருந்து குறிப்பிட்டு விலக்கப்பட்டிருந்தாற் தவிர, SLFRS 3 *வியாபார இணைப்புக்கள்* 2012 ஜனவரி 1ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த கணக்கீட்டுக் காலங்களுக்கு பிரயோகிக்கப்படும். SLFRS 3 இன் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்ட வியாபார இணைப்புக்களுக்கு, உதாரணமாக பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் அமைந்த உரிமங்கள் அல்லது வியாபாரங்கள் சம்பந்தப்பட்ட வியாபார இணைப்புக்களுக்கு, பொருத்தமான கணக்கீட்டுக் கையாள்கையினை குறிப்பிடும் குறிப்பான கணக்கீட்டு நியமம் கிடையாது

3. SLFRS 3 இன் பிரயோக வழிகாட்டி (பந்தி B1) பொதுக் கட்டுப்பாட்டின் கீழான உரிமங்கள் அல்லது வியாபாரங்கள் சம்பந்தப்பட்ட வியாபார இணைப்பினை "இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்கள் எல்லாம் ஈற்றில் வியாபார இணைப்பிற்கு முன்னரும் பின்னரும் அதே தரப்பினர் அல்லது தரப்பினர்களால் கட்டுப்படுத்தப்படுவதுடன், அந்தக் கட்டுப்பாடு மாற்றப்பட முடியாதது" என பொருள் வரையறை செய்கின்றது. அவ்வாறான வியாபார இணைப்புக்கள், SLFRS3 இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட அல்லது அப்பாற்பட்ட ஏனைய வியாபார இணைப்புக்களிலிருந்து வேறுபடுத்தும் பொருட்டு இதன் பின்னர் இந்த SoRP இல் "பொதுவான கட்டுப்பாட்டு இணைப்புக்கள்" என அழைக்கப்படும்.

4. ஒரு விடயத்திற்கு குறிப்பாக பிரயோகிக்கக்கூடிய நியமம் அல்லது விளக்கம் இல்லாத இடத்து, கணக்கீட்டுக் கொள்கையினை தேர்வு செய்வதற்கான தேவைப்பாடுகளை LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் எனும் நியமத்தின் பந்திகள் 10-12 கொண்டுள்ளது. பொதுக் கட்டுப்பாட்டு இணைப்புகள் SLFRS 3 இன் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டவையாகும். அதன்படி, உரிமமொன்று பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையை LKAS 8 இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக தேர்வு செய்வதுடன், பல உரிமங்கள் அந்த ஒருங்கிணைப்புக் கணக்கீடு பொதுக் கட்டுப்பாட்டு இணைப்புக்களுக்கான பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையென கருதுகின்றன.

**கோட்பாடுகள்**

5. வியாபார இணைப்புகளின் கணக்கீட்டிற்கு ஒருங்கிணைப்பு கணக்கீட்டை உபயோகிக்க அடிப்படையாக அமையும் கோட்பாடு, சுவீகரிப்பு இடம்பெறவில்லை என்பதும் வியாபார இணைப்பிற்கு முன்னர் இருந்த கட்டுப்படுத்தும் தரப்புக்கு (தரப்பினருக்கு) இடர் மற்றும் பயன் தொடரும் என்பதுமாகும். ஒருங்கிணைப்பு கணக்கீட்டின் உபயோகமானது இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்களின் கணக்கீட்டினை முன்னர்போல வேறான உரிமங்கள் அல்லது வியாபாரங்கள் தொடருகின்றன என்ற அடிப்படையில் கணக்கீடு செய்வதன் மூலம் இதனை அங்கீகரிக்கின்றது.

6. ஒருங்கிணைப்புக் கணக்கீட்டினை பிரயோகிக்கையில், பொதுக் கட்டுப்பாட்டு இணைப்பு இடம் பெறும் அறிக்கையிடற் காலத்திற்கான மற்றும் வெளிக்காட்டப்படும் எந்த ஒப்பீட்டுக் காலங்களுக்குமான இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்களின் நிதிக்கூற்று உருப்படிகள், ஒன்றிக்கும் உரிமங்கள் அல்லது வியாபாரங்கள் முதற்தடவையாக கட்டுப்படுத்தும் தரப்பு அல்லது தரப்புக்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த திகதியிலிருந்து இணைப்பு ஏற்பட்டிருப்பின் அந்த அடிப்படையில், இணைக்கப்பட்ட உரிமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும்.

7. இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்கள் முன்னர் மூன்றாம் தரப்பினரிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட உரிமம் அல்லது வியாபாரத்தினை உள்ளடக்குமேயாகில், அத்தகைய உரிமம் அல்லது வியாபாரத்தின் நிதிக்கூற்று உருப்படிகள் இணைந்த உரிமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவது முன்னைய சுவீகரிப்புத் திகதியிலிருந்து அந்தத் திகதியில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சுவீகரிப்புப் பெறுமதிகளை உபயோகித்து மாத்திரமே.

8. இணைந்த உரித்தினால் ஒரு தனியான சீரான கணக்கீட்டுக் கொள்கைகளின் தொடை கடைப்பிடிக்கப்படும். எனவே, இணைந்த உரிமம் இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்களின் சொத்துக்கள், பரிப்புக்கள் மற்றும் உரிமையாண்மையினை பொதுக் கட்டுப்பாட்டு இணைப்பிற்கு முன்னர் முன்கொணரப்பட்ட தொகையில் கட்டுப்படுத்தும் தரப்பு அல்லது தரப்புகளின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யும். கட்டுப்படுத்தும் தரப்பு அல்லது தரப்புக்களால் முன்னர் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிராத இடத்து, முன்கொணற் தொகைகளை அந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு இருப்பின் எப்படியோ அந்தப்பெறுமதிகளில், இணைந்த உரிம கணக்கீட்டு கொள்கைகளுடன் இசைவதற்கு தேவையான செம்மையாக்கங்கள் அடங்கலாக உட்படுத்துவதுடன் அந்தக் கொள்கைகளை முன்னிலைப்படுத்தும் சகல காலங்களுக்கும் பிரயோகிக்கும். இந்த முன்கொணரற் தொகைகள் கீழே **'கட்டுப்படுத்தும் தரப்பினரின் கண்ணோட்டத்தில் நிலவும் ஏட்டுப்பெறுமதிகள்'** என குறிப்பிடப்படும். கட்டுப்படுத்தும் தரப்பினரின் நாட்டம் தொடரும் வரையில் மேலதிக நன்மதிப்புக்களோ அல்லது பொதுக்கட்டுப்பாட்டு இணைப்பின்போது கிரயத்திற்கு மேலாக சுவீகரிக்கப்படும் உரிமத்தின் இனங்காணற்தகு சொத்துக்கள், பலிப்புக்கள் மற்றும் உறுமுரிமைப் பரிப்புக்களின் நிகர சீர்மதிப்பில் சுவீகரிக்கும் உரிமத்தின் நாட்டத்தின் மிகையோ ஏற்பிசைவு செய்யப்பட மாட்டாது. அதேபோல, LKAS 27 க்கு அமைவாக இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்களுக்கு இடையேயான சகல ஊடுசெயல்களின் தாக்கங்களும், அவை இணைவுக்கு முன்னரோ அல்லது பின்னரோ இடம்பெற்ற போதிலும், இணைந்த உரிமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் நீக்கப்படும்.

**விதிமுறைகள்**

9. ஒன்றிணைப்புக் கணக்கீட்டின் நடைமுறைத் தாக்கங்கள்:

(அ) கட்டுப்படுத்தும் உரிமங்களின் கண்ணோட்டத்தில், இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்களின் நிகரச் சொத்துக்கள் அப்போதைய ஏட்டுப் பெறுமதிகளை உபயோகித்து ஒன்றித்தல் செய்யப்படும் (பந்தி 8 பார்க்க). சுவீகரித்த உரிமத்தின் அல்லது வியாபாரத்தின் சொத்துக்களும் பரிப்புக்களும் கட்டுப்படுத்தும் தரப்பினரின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் ஏட்டுப் பெறுமதிகளில் பதிவு செய்யப்படும். (அதாவது, இது சுவீகரிக்கப்பட்ட உரிமம் அல்லது வியாபாரத்தின் இனங்காணற்தகு சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் கட்டுப்படுத்தும் தரப்பு மூன்றாம் தரப்பிடமிருந்து ஆரம்பத்தில் கொள்வனவு செய்த திகதிச் சீர்மதிப்பில் பதிவு செய்வதனை தேவைப் படுத்துவதுடன், முன்னைய சுவீகரிப்பு மற்றும் சிறுபான்மையினர் பாத்தியதையினால் ஏற்பட்ட நன்மதிப்பின் எஞ்சியுள்ள தொகையை (ஏதுமிருப்பின்), கட்டுப்படுத்தும் உரிமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யும்). கட்டுப்படுத்தும் உரிமம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்காதபோது, சுவீகரிக்கப்பட்ட உரிமத்தின் முன்கொணரற் தொகைகள் அவ்வாறான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதாகக் கொண்டு உட்படுத்தப்படும்.

(ஆ) கட்டுப்படுத்தும் தரப்பினரின் நாட்டம் தொடரும் அளவுக்கு நன்மதிப்பிற்கான அல்லது பொதுக்கட்டுப்பாட்டு இணைப்பின்போது கிரயத்திற்கு மேலாக சுவீகரிக்கப்படும் உரிமத்தின் இனங்காணற்தகு சொத்துக்கள், பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைப் பரிப்புக்களின் நிகர சீர்மதிப்பில் சுவீகரிக்கும் உரிமத்தின் நாட்டத்தின் மிகைக்கான பதிலிறுக்கியாக எந்தத் தொகையும் ஏற்பிசைவு செய்யப்பட மாட்டாது; அத்துடன்

(இ) இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்கள் முதற் தடவையாக பின்னைய திகதியொன்றில் பொதுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருந்தாலன்றி, நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டுப் பெறுமதிகள் மேலே 9 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளை உபயோகித்து, உரிமங்கள் அல்லது வியாபாரங்கள் முன்னைய ஐந்தொகைத் திகதியில் இணைக்கப்பட்டதாகக் கொண்டு முன்னிலைப்படுத்தப்படும்.

10. ஒன்றித்த வருமானக்கூற்று, முன்னிலைப்படுத்தும் மிகமுந்திய திகதியிலிருந்து அல்லது இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்கள் முதற்தடவையாக கட்டுப்படுத்தும் தரப்பு அல்லது தரப்புக்களின் கட்டுப்பாட்டின்கீழ் வந்த திகதியிலிருந்து (இது குறைந்தளவு காலமாக இருப்பின், பொதுக் கட்டுப்பாட்டு இணைப்புத் திகதியினை கருத்திற் கொள்ளாது) இணையும் ஒவ்வொரு உரிமங்கள் அல்லது வியாபாரங்களின் பெறுபேறுகளை (அதாவது, ஒப்பீட்டுக்காலம் அடங்கலாக) உட்படுத்தும். ஒன்றித்த வருமானக்கூற்று கட்டுப்படுத்தும் தரப்பின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்த சிறுபான்மையினர் பாத்தியதைக்கு ஒதுக்கப்படக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தையும் கணக்கிற் கொள்ளும்.

11. ஒருங்கிணைப்புக் கணக்கீட்டினை உபயோகித்து கணக்கிடவேண்டிய பொதுக் கட்டுப்பாட்டு இணைப்பு தொடர்பாக இறுக்கப்படும் செலவினம் அது இறுக்கப்படும் காலத்திலேயே செலவாக ஏற்பிசைவு செய்யப்படும். அத்தகைய செலவினம் திறன்தொழில்சார் கட்டணங்கள், பதிவுக் கட்டணங்கள், பங்குதாரர்களுக்கு தகவல்களை வழங்குவதற்கான கிரயங்கள் மற்றும் பொதுக் கட்டுப்பாட்டு இணைப்பினை அடைதலில் சம்பந்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் ஏனைய செலவுகளை உள்ளடக்கும். அத்துடன் இது முன்னர் வேறானவையாக இருந்த தொழிற்பாடுகளை இணைத்தலில் இறுக்கிய கிரயங்கள் மற்றும் இழப்புக்கள் ஏதுமிருப்பின் அவற்றினையும் உள்ளடக்கும்.

12. ஒன்றித்தல் LKAS 27 க்கு அமைவாக மேற்கொள்ளப்படும். முக்கிய ஒன்றித்தற் பதிவுகள் கீழ்வருமாறு:

(அ) பொதுக்கட்டுப்பாட்டு இணைப்பிற்கு முன்னரோ அல்லது பின்னரோ ஏற்பட்ட போதிலும், இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்களுக்கு இடையிலான சகல ஊடுசெயல்களினதும் தாக்கங்கள் நீக்கப்படும்;

(ஆ) இணைந்த உரிமம் ஒரு தொடை ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை முன்னிலைப் படுத்துவதனால், ஒரேசீரான கணக்கீட்டுக்கொள்கைத் தொடையொன்றினை கடைப் பிடிப்பதுடன், இது இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்களின் சொத்துக்கள், பரிப்புக்கள் மற்றும் உரிமையாண்மையில் செம்மையாக்கங்களை விளைவிக்கக் கூடும்.

**புதிதாக ஆக்கப்பட்ட மேன்னிலை உரிமத்தினால் அடக்கப்படும் கணக்கீட்டுக் காலம்**

13. பொதுக் கட்டுப்பாட்டு இணைப்பொன்று, புதிய மேன்னிலை உரிமமொன்றினை நிறுவி, இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்களின் வழங்கப்பட்ட பங்குகள் அல்லது உரிமையாண்மைகளை அவற்றிற்கு பரிமாற்றாக அதன் சொந்தப்பங்குகளை வழங்குவதன் மூலம் கொள்வனவு செய்வதனால் ஏற்படுத்தப்படலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில், புதிய மேன்னிலை உரிமத்தின் முதலாவது கணக்கீட்டுக் காலம் அனேகமாக குழுமத்தினால் தேர்வு செய்யப்படும் ஐந்தொகைத் திகதியில் முடிவடையும் ஒரு ஆண்டுக்கு குறைவான காலமாக இருக்கும். இது வழக்கமாக ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்களின் நடப்பு ஐந்தொகைத் திகதியாக இருக்கும்.

14. அனேகமாக, புதிய மேன்னிலை உரிமத்தினை நிறுவும் திகதி குழுமத்தின் கணக்கீட்டுக் காலங்களின் ஆரம்ப அல்லது முடிவுத் திகதிகளை ஒத்ததாக இருக்காது. மேன்னிலை உரிமம் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக இருப்பின், கட்டாயமாக ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் மேன்னிலை உரிமத்தின் கணக்கீட்டுக் காலத்தினை அடக்கவேண்டுமென கம்பனிகள் சட்டம் தேவைப்படுத்துகின்றது. இந்த தேவைப்பாடு ஒப்பீட்டுத் தகவல்களின் வெளிக்காட்டலை தடைசெய்கின்றதென வாதாட முடியும். இருந்தபோதிலும் அடக்கத்தில், இணையும் உரிமங்கள் அல்லது வியாபாரங்கள், புதிய சட்டரீதியான மேன்னிலை உரிமத்துடன் ஆனால் முன்னரைப்போன்றே வியாபாரத்தில் தொடரும்போது, அறிக்கையிடும் காலம்பூராக மேன்னிலைஉரிமத் தொடர்புமுறை இருந்ததாகக் கொண்டு ஒன்றித்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து அவை தயாரிக்கப்பட்ட அடிப்படையினை அடிக்குறிப்பாக காட்டுதல் பொருத்தமானதாகும்.

**பிரயோகிக்கக்கூடிய SLFRSs/LKASs களில் தேவைப்படுத்தியவற்றிற்கு மேலதிகமான வெளிக்காட்டல்கள்**

15. உரிமங்கள், பொதுக் கட்டுப்பாட்டு இணைப்பொன்றிற்கு கணக்கீட்டினை மேற்கொள்கையில் ஒன்றித்த கணக்கீட்டு கோட்பாடுகளை உபயோகித்து, பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையினை வெளிக்காட்டும். கணக்கீட்டுக் கொள்கையின் விபரங்கள் குறிப்பிட்ட கோட்பாடுகளின் விபரிப்பு மற்றும் ஒருங்கிணைப்புக் கணக்கீட்டின் கீழ் பிரயோகிக்கப்பட்ட அடிப்படைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றபோதிலும் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாது.

16. 'உண்மையானதும் நியாயபூர்வமானதுமான தோற்றப்பாட்டை' காட்டும் முக்கியத்துவத்தினை கவனத்திற் கொண்டு இந்த SoRP இனை பிரயோகிக்கும் உரிமங்கள் அவற்றின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் பொதுக் கட்டுப்பாட்டு இணைப்புக்கள் பற்றிய கணிசமான விபரங்களை வெளிக்காட்டும்.

17. ஒருங்கிணைப்பு கணக்கீட்டை உபயோகித்து கணக்கிடப்படும் ஒவ்வொரு பொதுக்கட்டுப்பாட்டு இணைப்பிற்கும் கீழ்வரும் தகவல்கள் வெளிக்காட்டப்படும்:

(அ) இணையும் உரிமங்களின் தன்மை (அறிக்கையிடும் உரிமத்தினது தவிர);

(ஆ) பொதுக் கட்டுப்பாட்டு இணைப்புத் திகதி;

(இ) வழங்கிய பங்குகள் தவிர பதிலிறுக்கியின் ஆக்கக்கூறுகளும் அவற்றின் சீர்மதிப்பும்;

(ஈ) கணக்கீட்டுக் கொள்கைகளில் ஒத்த தன்மையினை அடைதலில் எந்தவொரு உரிமம் அல்லது வியாபாரத்தினது நிகரச் சொத்துக்களில் அல்லது நிகர இலாபம் அல்லது நட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணிசமான கணக்கீட்டுச் செம்மையாக்கங்களின் தன்மையும் தொகைகளும் அத்துடன் பொதுக் கட்டுப்பாட்டு இணைப்பின் தொடர் விளைவாக எந்தவொரு உரிமம் அல்லது வியாபாரத்தினது நிகரச் சொத்துக்களில் அல்லது நிகர இலாபம் அல்லது நட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணிசமான வேறு கணக்கீட்டுச் செம்மையாக்கங்கள் பற்றிய விளக்கங்களும்;

(உ) ஒன்றித்த ஒதுக்கங்களுக்கான செம்மையாக்கங்கள் பற்றிய ஒரு கூற்று.

**பங்கொன்றிற்கான வருவாய்**

18. இணைந்த உரிமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் அந்த இணைந்த உரிமம் எப்போதும் இருந்துள்ளது எனக்கொண்டு தயாரிக்கப்படுவதனால், பொதுக் கட்டுப்பாட்டு இணைப்பின் பகுதியாக வழங்கப்படும் ஒருங்கிணைப்பு கணக்கீட்டினை உபயோகித்து கணக்கிடப்பட்ட சாதாரண பங்குகள், முன்னிலைப்படுத்தப்படும் சகல காலங்களிலும் நிலுவையிலிருந்த பங்குகளின் சராசரி எண்ணிக்கையின் கணிப்பீட்டில் உட்படுத்தப்படும். எனவே, பொதுக் கட்டுப்பாட்டு இணைப்பொன்றில் பங்கொன்றிற்கான அடிப்படை வருவாயினை கணித்தலில் உபயோகிக்கப்படும், ஒருங்கிணைப்பு கணக்கீட்டினை உபயோகித்து கணக்கிடப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கையானது இணைப்பின் பின்னர் பங்குகள் எஞ்சியிருக்கும் உரிமத்தின் நிலுவையிலுள்ள பங்குகளின் சராசரி எண்ணிக்கையாகும்.

**அமுலுக்கு வரும் திகதி**

19. இந்த விதந்துரைக்கப்பட்ட நடைமுறைக்கூற்று 2013 சனவரி 1ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் நிதிக் காலங்களுக்கு நடைமுறைக்கு வரும்.

**பின்னிணைப்பு - 1**

**<u>எண்கள் அடிப்படையிலான உதாரணம்</u>**

*இந்த பின்னிணைப்பு SoRP இன் பகுதியாக அமையாததுடன் விளக்கத் தேவைகளுக்காக மாத்திரம் உட்படுத்தப்பட்டுள்ளது. உதாரணங்கள் சாத்தியமான சகல நிலைகளையும் அடக்கும் நோக்கம் கொண்டவையல்ல.*

**<u>பின்னணித் தகவல்கள்</u>**


உரிமம் P பல உபகம்பனிகளை கொண்டுள்ளது. இந்த உதாரணம் உரிமம் X, உரிமம் Y மற்றும் உரிமம் A எனும் மூன்று உபகம்பனிகளை கருத்திற் கொள்ளுகின்றது.

உரிமம் P பல ஆண்டுகளுக்கு முன்னர் உரிமம் X இன் 100% இனை ரூபா 18,000 க்கு கொள்வனவு செய்தது. அப்போது உரிமம் P, நன்மதிப்பாக ரூபா 3,000 இனையும் கொள்வனவு செய்யப்பட்ட இனங்காணற்தகு சொத்துக்களின் சீர்மதிப்பாக ரூபா 15,000 இனையும் (அது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் அப்போதைய முன்கொணற் தொகை) பதிவுசெய்தது.

உரிமம் P , உரிமம் Y இனை பல ஆண்டுகளுக்கு முன்னர் குழுமத்திற்கு வெளித் தரப்பினரான பங்குதாரர் S உடன் சேர்ந்து உருவாக்கியது. உரிமம் Y இல் அதன் பங்கு மூலதனத்தின் 75% க்கான உரிமம் P யின் முதலீட்டின் கிரயம் ரூபா 15,000. .

உரிமம் P, 20X0 ஜனவரி 1ஆம் திகதி ரூபா 10,000 இனை பங்கு மூலதனமாக உட்படுத்தி A எனும் புதிய உரிமத்தினை உருவாக்கியது.

20X1 டிசம்பர் 31இல் உரிமம் A யானது, உரிமம் P மற்றும் பங்குதாரர் S இடமிருந்து கொள்வனவு செய்து உரிமம் X மற்றும் உரிமம் Y ஒவ்வொன்றிலும் 100% பங்குகளை கொள்வனவு செய்தது. அதற்குப் பிரதியீடாக உரிமம் A ஆனது உரிமம் Y மற்றும் பங்குதாரர் S க்கு முறையே ரூபா 1 இனை சமப்பெறுமதியாகக் கொண்ட 7,000 மற்றும் 3,000 பங்குகளை வழங்கியது. உரிமங்கள் A, X மற்றும் Y ஆகியவற்றின் நிதியாண்டு டிசம்பர் 31 இல் முடிவடைகிறது. 20X1 டிசம்பர் 31இல் உரிமம் Y யின் சொத்துக்கள், பரிப்புக்களின் சீர்மதிப்பு அவற்றின் முன்கொணரற் தொகைகளுக்கு சமமாகும். வியாபார இணைப்பினால் ஏற்படும் வரித்தாக்கம் எதனையும் தவிர்க்கவும்.




**31 டிசம்பர் 20X1 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமம் A, உரிமம் X, உரிமம் Y ஆகியவற்றின் வருமானக் கூற்றுக்கள் :**

| | *உரிமம் A* | *உரிமம் X* | *உரிமம் Y* |
|---|---|---|---|
| | *ரூபா* | *ரூபா* | *ரூபா* |
| வருமானம் | 2,000 | 40,000 | 50,000 |
| இலாபம் அல்லது நட்டம் | (4,000) | 20,000 | 20,000 |

**31 டிசம்பர் 20X1 இல் உரிமம் A, உரிமம் X, உரிமம் Y ஆகியவற்றின் ஐந்தொகைகள்:**

| | *உரிமம் A (பங்குகள் வழங்க முன்னர்)* | *உரிமம் A (பங்குகள் வழங்கிய பின்னர்)* | *உரிமம் X* | *உரிமம் Y* |
|---|---|---|---|---|
| | *ரூபா* | *ரூபா* | *ரூபா* | *ரூபா* |
| உப கம்பனியில் முதலீடு | - | 2,23,000 | - | - |
| ஏனைய சொத்துக்கள் | 5,000 | 5,000 | 1,00,000 | 1,20,000 |
| நிகரச் சொத்துக்கள் | 5,000 | 228,000 | 1,00,000 | 1,20,000 |
| மூலதனம் (பங்குவட்டம் உட்பட) | 10,000 | 233,000 | 10,000 | 20,000 |
| திரள் இலாபம் (நட்டம்) | (5,000) | (5,000) | 90,000 | 1,00,000 |
| | 5,000 | 2,28,000 | 1,00,000 | 1,20,000 |

\# பதிலிறுக்கியாக உரிமம் A வழங்கிய 10,000 புதிய பங்குகள் உரிமம் X மற்றும் உரிமம் Y இனை சுவீகரித்த கருதப்படு கிரயத்திற்கு சமமான தொகையில் (ரூபா 2,23,000) பதிவு செய்யப்படும். உரிமம் X இனை கொள்வனவு செய்தலில் கருதப்படு கிரயம் ரூபா 1,03,000 ஆகும். இது 20X1 டிசம்பர் 31 இல் உரிமம் X இன் நிகரச் சொத்துக்களின் அப்போதைய ஏட்டுப்பெறுமதி ரூபா 1,00,000 உடன் உரிமம் P யினால் உரிமம் X சுவீகரிக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட சீர்மதிப்பின் எஞ்சிய தொகை ரூபா 3,000 இனை கூட்டவரும் தொகை ஆகும். உரிமம் Y யின் சுவீகரிப்பின் கருதப்படு கிரயம் ரூபா 1,20,000, 20X1 டிசம்பர் 31 இல் உரிமம் Y இன் நிகரச் சொத்துக்களின் அப்போதைய ஏட்டுப்பெறுமதியாகும். இந்த உதாரணத்தில் உபயோகிக்கப்படும் கருதப்படு கிரயம் விளக்கத் தேவைக்கு மாத்திரமே. இது உபகம்பனிகளை கொள்வனவுசெய்த கிரயமாக உரிமம் A யின் தனியான நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடவேண்டிய தொகையினை பிரதிபலிக்கவேண்டிய அவசியமில்லை.

**31 டிசம்பர் 20X0 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமம் A, உரிமம் X, உரிமம் Y ஆகியவற்றின் வருமானக் கூற்றுக்கள்:**

| | *உரிமம் A* | *உரிமம் X* | *உரிமம் Y* |
|---|---|---|---|
| | *ரூபா* | *ரூபா* | *ரூபா* |
| வருமானம் | 1,000 | 38,000 | 45,000 |
| இலாபம் அல்லது நட்டம் | (2,000) | 15,000 | 12,000 |

**31 டிசம்பர் 20X0 இல் உரிமம் A, உரிமம் X, உரிமம் Y ஆகியவற்றின் ஐந்தொகைகள்:**

| | *உரிமம் A* | *உரிமம் X* | *உரிமம் Y* |
|---|---|---|---|
| | *ரூபா* | *ரூபா* | *ரூபா* |
| வருமானம் | 9,000 | 80,000 | 100,000 |
| மூலதனம் (பங்குவட்டம் உட்பட) | 10,000 | 10,000 | 20,000 |
| திரள் இலாபங்கள் (நட்டங்கள்) | (1,000) | 70,000 | 80,000 |
| | 9,000 | 80,000 | 1,00,000 |

**பகுப்பாய்வு**

உரிமம் A, உரிமம் X மற்றும் உரிமம் Y ஆகியன வியாபார இணைப்பிற்கு முன்னரும் பின்னரும் உரிமம் P யின் பொதுவான கட்டுப்பாட்டின்கீழ் உள்ளமையினால், வியாபார இணைப்பு SLFRS 3 இன் நோக்கெல்லையிலிருந்து குறிப்பாக நீக்கப்படுகின்றது.

உரிமம் A யின் பணிப்பாளர்கள் உரிமம் X மற்றும் உரிமம் Y இல் பங்குகளின் சுவீகரிப்பினை ஒருங்கிணைப்பு கணக்கீட்டுக் கோட்பாட்டினை உபயோகித்து கணக்கிற் கொள்ள தீர்மானிக்கின்றனர்.

ஒருங்கிணைப்பு கணக்கீட்டு கோட்பாடுகளின் கீழ் உரிமம் X மற்றும் உரிமம் Y ஆகியவற்றின் சொத்துக்களும் பரிப்புக்களும், இணைப்பிற்கு உடனடியாக முன்னதாக உரிமம் P யின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட தற்போதைய ஏட்டுப் பெறுமதிகளில், உரிமம் A யின் நிதிக்கூற்றுக்களில் ஒன்றித்தல் செய்யப்படும். இந்த விதிமுறை, இணைப்பிற்கு உடனடியாக முன்னர் உரிமம் P யின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் கூறப்பட்டவாறு, ஆரம்பத்தில் உரிமம் P யினால் உரிமம் X சுவீகரிக்கப்பட்டபோது ஏற்பட்ட நன்மதிப்பு மற்றும் உரிமம் Y யில் சிறுபான்மையினர் பாத்தியதை ஆகியவற்றின் பதிவினை தேவைப்படுத்துகின்றது. அங்கு மேலதிக நன்மதிப்போ அல்லது சுவீகரிக்கும் உரிமத்தின் நாட்டத்தில், இணைப்பின்போது சுவீகரிப்புக்கு உள்ளாகும் உரிமத்தின் இனங்காணத்தகு சொத்துக்கள், பரிப்புக்கள் அல்லது உறுமுரிமைப் பரிப்புக்களின் கிரயத்திற்கு மேலாக நிகர சீர்மதிப்பில் மிகையோ இருக்கமாட்டாது.

**உரிமம் A யின் 31 டிசம்பர் 20X1 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றித்த வருமானக்கூற்று:**

| | *உரிமம் A* | *உரிமம் X* | *உரிமம் Y* | *செம்மையாக்கம்* | *ஒன்றித்த* |
|---|---|---|---|---|---|
| | *ரூபா* | *ரூபா* | *ரூபா* | *ரூபா* | *ரூபா* |
| வருமானம் | 2,000 | 40,000 | 50,000 | | 92,000 |
| இலாப, நட்டம் | (4,000) | 20,000 | 20,000 | | 36,000 |
| உரிமம் Y இல் முன்னைய சிறுபான்மையினர் பாத்தியதைக்கான | | | | 5,000 (Y1) | (5,000) |
| உரிமம் A யின் உரிமையாண்மைக் கொள்ளுனருக்கான | | | | | 31,000 |

<u>செம்மையாக்கம்:</u>

(Y1) இணைப்பிற்கு முன்னர் உரிமம் Y இல் சிறுபான்மையினர் பாத்தியதைக்கு ஒதுக்கக்கூடிய இலாபத்தினை பிரதிபலிக்கும் செம்மையாக்கமாக.

**உரிமம் A யின் 31 டிசம்பர் 20X1 திகதியின்படி ஒன்றித்த ஐந்தொகை:**

| | உரிமம் A ரூபா | உரிமம் X ரூபா | உரிமம் Y ரூபா | செம்மையாக்கம் ரூபா | | ஒன்றித்த ரூபா |
|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | | | | 3,000 | (X1) | 3,000 |
| உரிமங்கள் X , Y இல் முதலீடுகள் | 2,23,000 | - | - | (1,03,000) | (X3) | - |
| | | | | (1,20,000) | (Y5) | |
| ஏனைய சொத்துகள் | 5,000 | 1,00,000 | 1,20,000 | | | 2,25,000 |
| நிகர சொத்துகள் | 2,28,000 | 1,00,000 | 120,000 | | | 2,28,000 |
| மூலதனம் (பங்கு வட்டம் அடங்கலாக) | 2,33,000 | 10,000 | 20,000 | (10,000) | (X3) | 2,33,000 |
| | | | | (20,000) | (Y5) | |
| ஏனைய ஒதுக்கம் | - | - | - | | | |
| | | | | (85,000) | (X3) | (1,60,000) |
| | | | | (75,000) | (Y5) | |
| திரள் இலாபம் (நட்டம்) | (5,000) | 90,000 | 1,00,000 | (5,000) | (X2) | 1,55,000 |
| | | | | (25,000) | (Y4) | |
| | 2,28,000 | 1,00,000 | 1,00,000 | 1,20,000 | | 2,28,000 |

<u>செம்மையாக்கங்கள்</u>

உரிமம் X தொடர்பாக:

(X1) இணைப்பிற்கு உடனடியாக முன்னதாக உரிமம் P யின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டவாறு, உரிமம் P யினால் உரிமம் X ஆரம்பத்தில் சுவீகரிக்கப்பட்டபோது ஏற்பட்ட நன்மதிப்பினை பதிவுசெய்யும் செம்மையாக்கமாக (ரூபா 3,000).

(X2) உரிமம் P யினால் உரிமம் X ஆரம்பத்தில் சுவீகரிக்கப்பட முன்னர் உழைக்கப்பட்ட உரிமம் X இன் திரண்ட இலாபங்களை நீக்கும் செம்மையாக்கமாக (ரூபா 5,000).

(X3) உரிமம் A யின் தொடர்புபட்ட முதலீட்டுக் கிரயத்திற்கு எதிராக உரிமம் X இன் மூலதனப் பங்கினை நீக்கும் செம்மையாக்கமாக. ரூபா 85,000 செய்மையாக்கம் உரிமம் A யின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் வேறான ஒதுக்கம் ஒன்றிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உரிமம் Y தொடர்பாக:

(Y4) இணைப்பிற்கு முன்னர் உரிமம் Y யின் சிறுபான்மையினர் பாத்தியதைக்கு ஒதுக்கக்கூடிய இலாபத்தினை பிரதிபலிக்கும் செம்மையாக்கமாக.

(Y5) உரிமம் A யின் தொடர்புபட்ட முதலீட்டுக் கிரயத்திற்கு எதிராக உரிமம் Y இன் மூலதனப் பங்கினை நீக்கும் செம்மையாக்கமாக. ரூபா 75,000 செய்மையாக்கம் உரிமம் A யின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் வேறான ஒதுக்கம் ஒன்றிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**உரிமம் A யின் 31, டிசம்பர் 20X0 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றித்த வருமானக்கூற்று:**

| | உரிமம் A<br>ரூபா | உரிமம் X<br>ரூபா | உரிமம் Y<br>ரூபா | செம்மையாக்கம்<br>ரூபா | Adj | ஒன்றித்த<br>ரூபா |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் | 1,000 | 38,000 | 45,000 | | | 84,000 |
| இலாப, நட்டம் | (2,000) | 15,000 | 12,000 | | | 25,000 |
| சிறுபான்மையினர் பாத்தியதைக்கான | | | | 3,000 | (Y1) | (3,000) |
| உரிமம் A யின் உரிமையாண்மைக் கொள்ளுனருக்கான | | | | | | 22,000 |

செம்மையாக்கம்:

(Y1) உரிமம் Y இல் சிறுபான்மையினர் பாத்தியதைக்கு ஒதுக்கக்கூடிய இலாபத்தை பிரதிபலிக்கும் செம்மையாக்கமாக.

**உரிமம் A யின் 31 டிசம்பர் 20X0 திகதியின்படி ஒன்றித்த ஐந்தொகை:**

| | உரிமம் A<br>ரூபா | உரிமம் X<br>ரூபா | உரிமம் Y<br>ரூபா | செம்மையாக்கம்<br>ரூபா | Adj | ஒன்றித்த<br>ரூபா |
|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | - | - | - | 3,000 | (X2) | 3,000 |
| உரிமங்கள் X, Y | | | | 1,93,000 | (1) | - |
| இல் முதலீடுகள் | | - | | - | | - |
| | | | | (1,03,000) | (X4) | |
| | | | | (90,000) | (Y5) | |
| ஏனைய சொத்துகள் | 9,000 | 80,000 | 1,00,000 | | | 1,89,000 |
| நிகர சொத்துகள் | 9,000 | 80,000 | 1,00,000 | | | 192,000 |
| மூலதனம் (பங்கு வட்டம் அடங்கலாக) | 10,000 | 10,000 | 20,000 | 1,93,000 | (1) | 2,03,000 |
| | | | | (10,000) | (X4) | |
| | | | | (20,000) | (Y5) | |
| ஏனைய ஒதுக்கம் | - | - | - | | | |
| | | | | (85,000) | (X4) | (1,60,000) |
| | | | | (75,000) | (Y5) | |
| சிறுபான்மையினர் பாத்தியதை | - | - | | 25,000 | (Y5) | 25,000 |
| திரள் இலாபம் (நட்டம்) | (1,000) | 70,000 | 80,000 | (5,000) | (X3) | 1,24,000 |
| | | | | (20,000) | (Y5) | |
| | 9,000 | 80,000 | 100,000 | | | 1,92,000 |

*குறிப்பு: உரிமங்கள் முந்திய ஐந்தொகைத் திகதியில் இணைக்கப்பட்டதாக கொண்டு ஒப்பீட்டுப் பெறுமதிகள் திருத்திக் கூறப்பட்டுள்ளன. ஒன்றித்த பங்கு மூலதனம் வியாபார இணைப்பிற்காக வழங்கிய மூலதனப் பங்கிற்கு செம்மையாக்கிய உரிமம் A யின் மூலதனத்தை பிரதிபலிக்கின்றது.*

**செம்மையாக்கங்கள்**

(1) வியாபார இணைப்புத் தேவைக்காக வழங்கிய மூலதனத்தினை நீக்கும் செம்மையாக்கமாக (ரூபா 1,93,000 த்தில் ரூபா 1,03,000 உரிமம் X தொடர்பிலும் ரூபா 90,000 உரிமம் Y தொடர்பிலும்). ஒருங்கிணைந்த கணக்கீட்டில் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் நோக்கம் அவை எப்போதும் இணைக்கப்பட்டு இருந்திருப்பின் எவ்வாறோ அதேவகையில் இணையும் உரிமங்களின் பெறுபேறுகள் மற்றும் நிதிநிலைமைகளை காட்டுவதாகும். இதன் தொடர் விளைவாக வியாபார இணைப்பிற்காக வழங்கப்பட்ட 7,000 பங்குகள் தொடர்புபட்ட பங்கு மூலதனம் அது எப்போதும் வழங்கப்பட்டிருந்ததாகவே காட்டப்பட வேண்டும்.

உரிமம் X தொடர்பாக:

(X2) இணைப்பிற்கு உடனடியாக முன்னதாக உரிமம் P யின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டவாறு, உரிமம் P யினால் உரிமம் X ஆரம்பத்தில் சுவீகரிக்கப்பட்டபோது ஏற்பட்ட நன்மதிப்பினை பதிவுசெய்யும் செம்மையாக்கமாக (ரூபா 3,000).

(X3) உரிமம் P யினால் உரிமம் X ஆரம்பத்தில் சுவீகரிக்கப்பட முன்னர் உழைக்கப்பட்ட உரிமம் X இன் திரண்ட இலாபங்களை நீக்கும் செம்மையாக்கமாக (ரூபா 5,000).

(X4) உரிமம் A யின் தொடர்புபட்ட முதலீட்டுக் கிரயத்திற்கு எதிராக உரிமம் X இன் மூலதனப் பங்கினை நீக்கும் செம்மையாக்கமாக. ரூபா 85,000 செய்மையாக்கம் உரிமம் A யின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் வேறான ஒதுக்கம் ஒன்றிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உரிமம் Y தொடர்பாக::

(Y5) உரிமம் Y யின் மூலதனத்தினை உரிமம் A யின் தொடர்புபட்ட முதலீட்டுக் கிரயத்திற்கு எதிராக நீக்கும் செம்மையாக்கமாக. வியாபார இணைப்பிற்கு முன்னர் உரிமம் P ஆனது உரிமம் Y யில் 75% உரிமையாண்மை நாட்டத்தினை மாத்திரம் கொண்டிருந்தது. 20X0, டிசம்பர் 31ந் திகதியில் சிறுபான்மையினர் பாத்தியதையாக ரூபா 25,000 பதிவுசெய்யப்பட்டது. உரிமம் A யின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கத்தை வேறாக்க ரூபா 75,000 செம்மையாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பங்கொன்றிற்கான வருவாய்**

மேலே தரப்பட்ட உதாரணத்தின் ஒரே தரவுகளின் அடிப்படையில், உரிமம் A யின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு காலத்திற்குமான பங்கொன்றிற்கான அடிப்படை வருவாயின் கணிப்பீடானது ஒன்றித்த இலாபம் (சிறுபான்மையினர் பாத்தியதைக்கு உரிய இலாபம் நீங்கலாக) மற்றும் 20,000 பங்குகளின் (20X1, டிசம்பர் 31ந் திகதி முடிவுற்ற இரண்டு ஆண்டு காலம் பூராகவும் வழங்கலில் இருந்த உரிமம் A யின் 10,000 பங்குகளும், 20X1, டிசம்பர் 31ந் திகதி உரிமம் X மற்றும் உரிமம் Y ஆகியவற்றில் உரிமையாண்மை நாட்டங்களுக்கு பதிலிறுக்கியாக வழங்கப்பட்ட உரிமம் A யின் 10,000 பங்குகளும்) அடிப்படையில் அமையும்.

**APPENDIX 2**

**இந்த SoRP பிரயோகிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்கள்:**

சில உதாரணங்கள் கீழ்வருமாறு:

(அ) உரிமமொன்று புதிதாக உரிமமொன்றினை கூட்டிணைத்து, அதன் வியாபாரங்களுள் சிலவற்றை அல்லது சகலவற்றையும் அந்த புதிதாக கூட்டிணைக்கப்பட்ட உரிமத்திற்கு மாற்றுதல் .

(ஆ) ஒரு மேன்னிலைக் கம்பனி முழு உரிமை கொண்ட அதன் உபகம்பனியின் வியாபாரத்தினை மேன்னிலைக் கம்பனிக்கு மாற்றி, உபகம்பனியினை கலைத்தல். அந்த ஊடுசெயல் சட்டரீதியான அமைப்பு மாற்றமே தவிர அறிக்கையிடும் உரிமத்தில் மாற்றமல்ல.

(இ) ஒரு மேன்னிலைக் கம்பனி பகுதியான உரிமை கொண்ட உப கம்பனிகளில் அதன் நாட்டத்தினை புதிய முழு உரிமை கொண்ட உப கம்பனியொன்றிற்கு மாற்றுதல். இதுவும் சட்டரீதி அமைப்பு மாற்றமே தவிர அறிக்கையிடும் உரிமத்தில் மாற்றமல்ல.

(ஈ) மேன்னிலைக் கம்பனியொன்று அதன் முற்றாக உரிமை கொண்டுள்ள உபகம்பனியொன்றில் அதன் உரிமை நாட்டங்களை அல்லது வியாபாரத்தினை மேன்னிலைக் கம்பனி பகுதியாக உரிமை கொண்ட உபகம்பனியொன்றினால் வழங்கப்படும் மேலதிக பங்குகளுக்காக பரிமாற்றம் செய்வதன்மூலம் பகுதியாக உரிமை கொண்டுள்ள உபகம்பனியில் மேன்னிலை கம்பனியின் உரிமைச் சதவீதத்தினை அதிகரிப்பதுடன், இருப்பிலுள்ள சிறுபான்மையினர் பாத்தியதை எல்லாவற்றையும் நிலுவையில் விடுதல்.

1- 183